To

22nd August 2025

Listing Department BSE Limited 25th Floor, P. J. Towers, Dalal Street, Mumbai – 400 001. **Scrip Code: 505368**	Listing Department National Stock Exchange of India Limited Exchange Plaza, C-1, Block G, Bandra Kurla Complex, Bandra East, Mumbai – 400 051. **Scrip Code: SEMAC**

Dear Sir / Madam,

Sub: Submission of Newspaper Publication of Notice of 48th Annual General Meeting to be held on 12th September 2025.

With reference to our earlier communications regarding the 48th Annual General Meeting of the Company scheduled to be held on Friday, 12th September 2025 at 11:30 AM at the Registered Office of the Company at Pollachi Road, Malumachampatti Post, Coimbatore – 641 050, please find the enclosed copies of 48th AGM Notice published in the following newspapers on 22nd August 2025, in accordance with Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015:

1. Malai Murasu (Tamil Newspaper) and
2. Business Standard (English Newspaper)

Kindly take the same on your records.

Thanking you

For Semac Construction Limited
(Formerly Known as Semac Consultants Limited)

Aakriti Gupta
Company Secretary and Compliance Officer

Semac Construction Ltd.
(Formerly Known as Semac Consultants Limited.)
Plot No. 505, 3rd Floor, Udyog Vihar, Phase – III, Gurugram,
Haryana – 122016, India
Email: compliance.officer@semacconstruction.com

Corporate Identity Number
L42900TZ1977PLC000780
ISO 9001 : 2015

Registered Office:
Semac Construction Ltd.
Pollachi Road, Malumachampatti.
Coimbatore - 641 021.
Tel : + 91 422 2610851
Fax : + 91 442 6655199
Website: www.semacconstruction.com

Gurugram I Bengaluru I Navi Mumbai I Muscat

பா.ஜ.க. 'பூத்' கமிட்டி...

1–ம் பக்கத் தொடர்ச்சி

வகையில் பா.ஜ.க.வின் பிரசார மேடையாக அமைந்தது.

இந்த நிலையில், பா.ஜ.க.வின் தென்மண்டல பூத் கமிட்டி முதல் மாநாடு இன்று நெல்லையில் நடக்கிறது. இதில் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய 5 பாராளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட 28 சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த 8595 பூத் கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இந்த மாநாட்டில் பா.ஜ.க.மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் , மத்திய மந்திரி எல்.முருகன், முன்னாள் மாநில தலைவர்கள் அண்ணாமலை, தமிழிசை சவுந்தரராஜன், பொன் ராதாகிருஷ்ணன், எச்.ராஜா, தேசிய பொதுச் செயலாளர் பி.எல்.சந்தோஷ், தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன், எம்.எல்.ஏ.க்கள் எம்.ஆர்.காந்தி, சரஸ்வதி உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மத்திய உள்துறைமந்திரிஅமித்ஷா கேரள மாநிலம் கொச்சியில் இருந்து இன்று மதியம் 2.50 மணிக்கு தூத்துக்குடி விமானநிலையத்திற்கு வருகிறார். அங்கிருந்து ஹெலிகாப்டரில் பாளை ஆயுதப்படை மைதானத்திற்கு 3.10 மணியளவில் வந்து இறங்குகிறார். அங்கிருந்து காரில், பெருமாள்புரம் என்.ஜி.ஓ. காலனியில் உள்ள பா.ஜனதா மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வீட்டுக்கு சென்று, அங்கு தேநீர்விருந்தில் பங்கேற்றுவிட்டு மீண்டும் கார் மூலம் சாலை மார்க்கமாக வண்ணார்பேட்டை, வடக்கு புறவழிச்சாலை வழியாகவிழாமேடைக்கு மாலை 3.30 மணிக்கு வருகிறார்.

இந்த மாநாட்டில் அமித்ஷா சுமார் ஒருமணி நேரம் பேசுகிறார். அங்கு பா.ஜ.க. தலைவர்கள், முக்கிய நிர்வாகிகளை சந்தித்து சிறப்புரையாற்றுகிறார். கடந்த 11 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் தமிழக மக்களுக்கு எவ்வளவு திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதனால் மக்கள் அடைந்துள்ள பயன்கள் பற்றியும் விரிவாக பேச உள்ளார்.

மேலும், கூட்டணிகட்சியுடன் இணைந்து தேர்தலில் வெற்றி அடைவதற்கு மேற்கொள்ளப்பட உள்ள பணிகள், சட்டசபை தேர்தல் வியூகம் ஆகியவை குறித்து நிர்வாகிகளுடன் முக்கிய ஆலோசனை நடத்த உள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

அமித்ஷா வருகையையொட்டி நேற்று மதியம் பாளை ஆயுதப்படை மைதானத்தில் இருந்து விழா மேடை வரை வாகன பாதுகாப்பு ஒத்திகை நடத்தப்பட்டது. பாளையில் இருந்து முருகன்குறிச்சி, வண்ணார்பேட்டை, வடக்கு புறவழிச்சாலை வழியே ஆம்புலன்ஸ் உள்பட 20 வாகனங்கள் அணிவகுத்து சென்று ஒத்திகையில் ஈடுபட்டனர். இதனால் அந்த சாலைகளில் சில மணிநேரம் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டது.

மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹதிமணி, துணை கமிஷனர்கள் பிரசன்னகுமார், வினேத் சாந்தாராம், விஜயகுமார், சிறப்பு பாதுகாப்பு படை சூப்பிரண்டு டேனியல் உள்ளிட்ட அதிகாரிகள் இந்த ஒத்திகை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அதைதொடர்ந்து நேற்று மாலை முதல் விழா நடக்கும் இடம் முழுவதும் மத்திய ரிசர்வ் படை போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

மாநாட்டில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள இருப்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து விழா மேடை, வாகன நிறுத்தம், அமித்ஷா கார் செல்லும் வடக்கு புறவழிச்சாலை ரெயில்வே மேம்பாலம் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் போலீசார் மெட்டல் டிடெக்டர் மூலம் சோதனை நடத்தி வருகின்றனர். மோப்ப நாய், வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசாரும் அங்குலம் அங்குலமாக சோதனை நடத்தினர். நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் உத்தரவின்பேரில் துணை கமிஷனர் பிரசன்னகுமார் மேற்பார்வையில் நெல்லையில் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதனால் சுமார் 1200 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேபோல் பாதுகாப்பு காரணங்களுக்காக நெல்லை மாநகர பகுதி முழுவதும் இன்று காலை 8 மணி முதல் 10 மணி வரை டிரோன் பறக்கவும் தடை செய்யப்பட்டுள்ளது. அமித்ஷா வருகையையொட்டி நெல்லை மாநகரம் முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது. தென்மண்டல அளவிலான பூத் கமிட்டி மாநாட்டில் அமித்ஷா கலந்து கொள்வது பா.ஜ.க.வினரிடையே எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விஜய்க்கு அ.தி.மு.க., பா.ஜ.க. ...

1–ம் பக்கத் தொடர்ச்சி

மாற முடியாது. உலகத்திற்கே ஒரு புரட்சித் தலைவர், ஒரு புரட்சித் தலைவி, ஒரு பேரறிஞர் அண்ணா தான்.

நடிகர் விஜய், அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர் படம், பெயரை தனது அரசியல் பயணத்திற்காக பயன்படுத்துகிறார்.

"புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆரம்பித்த அ.தி.மு.க. என்ற இயக்கத்திற்கே அவர் மட்டும்தான் சொந்தக்காரர். அ.தி.மு.க.வின் இரட்டை இலைக்கு ஓட்டு போட்டகை, ஒரு காலமும் வேறு எங்கும் வாக்கு செலுத்தாது.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, அண்ணா ஆகியோரின் பெயரைச் சொல்லாமல் யாரும் அரசியல் செய்ய முடியாது என்பதை (விஜய்) ஒப்புக்கொண்டுள்ளார்.

"எங்கள் தலைவர் பெயரை விஜய் ஏற்றுக் கொண்டது எங்களுக்கு மகிழ்ச்சி. ஆனால் அது வாக்குகளாக வராது. அ.தி.மு.க.வின் இரட்டை இலை வாக்கு என்பது அ.தி.மு.க.வுக்கு மட்டும்தான் கிடைக்கும். "புரட்சித்தலைவர் படத்தை யார் போட்டாலும் சரி, அவரைப் போல் இருக்கிறோம் என்று சொன்னாலும் சரி, மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதுதேர்தலுக்கான வாக்கு பெறும் யுக்தி, ஆனால் ஒரு காலமும் வாக்கு பெற முடியாது," என்றார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயக்குமார் கூறும் போது, தமிழ் நாட்டை காக்க வந்த அவதார புருஷன் போல விஜய் தன்னை நினைத்துக் கொள்கிறார். தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜயின் அரசியல் ஆசான் யார் என்பது தெரியவில்லை. அண்ணா, எம்ஜிஆர் தவிர்த்து தமிழகத்தில் அரசியல் செய்ய முடியாத காரணத்தால் விஜய் அண்ணாவையும், எம்ஜிஆர் குறித்தும் பேசுகிறார். விஜய்க்கு எந்த ஒரு சந்தேகமும் வேண்டாம், அதிமுக எடப்பாடி பழனிச்சாமி தலைமையில்தான் உள்ளது என்றார். அதிமுக முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் கூறும்போது த.வெ.க. மாநாடு, விஜய் ரசிகர்களின் மாநாடு. வாக்குகளாக மாறுமா என பார்ப்போம். அண்ணா, எம்.ஜி.ஆர். படங்களை விஜய் மாநாட்டில் பயன்படுத்தியது, அவர்களின் அறியாமை". விஜய் பேச்சு குறித்து பா.ஜ.க. மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறுகையில், தமிழக வெற்றி கழக மாநாட்டை பொருத்தவரை அதை அரசியல் மாநாடாக பார்க்கவில்லை. ஒரு நடிகரை பார்க்க வந்த கூட்டமாகத்தான் பார்க்கிறேன். அவர் பேச்சில் முதிர்ச்சியற்ற தன்மையை பார்க்கிறேன். பிரதமரை இவ்வளவு காட்டமாக விமர்சிக்க விஜய்க்கு எந்த தார்மீக உரிமையும் இல்லை. பிரதமர் எதுவும் செய்யவில்லை என்கிறார். இன்று இந்த நாடு பாதுகாப்பாக இருப்பதற்கு பிரதமர் மோடி தான் காரணம். தீவிரவாதிகளை அவர் ஒழித்தார் என்று உலகமே பாராட்டுகிறது.

கச்சத்தீவை பற்றி பேசும் விஜய் அதை யார் தாரை வார்த்தார்கள் என்று பேசவில்லை. பாரதிய ஜனதாவை விமர்சிக்கும் விஜய் காங்கிரஸ் கட்சியை விமர்சிக்காதது ஏன்? விஜய் வாய்க்கு வந்ததை பேசுகிறார். கொள்கை எதிரி பா.ஜ.க. என்றுகூறும் விஜய் தனது கொள்கையை கூறவில்லை.

பிரதமரை இவ்வளவு காட்டமாக விமர்சிக்க அவசியமே இல்லை. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை பற்றி இஸ்லாமிய மதத்தை சேர்ந்த பெண் ராணுவ அதிகாரி தான் நாட்டிற்கே கூறினார். இஸ்லாமிய பெண்கள் ராணுவத்தில் இருப்பதை அடையாளம் கண்டு அதனை அவர்களை நாட்டுக்கு சொல்ல வைத்தவர்.

தாமரை இலையில் தண்ணீர் ஒட்டத்தேவையில்லை, தாமரை தண்ணீரில் வளரும். தாமரை தண்ணீரில் மலரும் என்றாவது விஜய்க்கு தெரியுமா?" த.வெ.க மாநாட்டை திரைப்படத்தைப் பார்ப்பது போன்ற ஜோரில் எல்லோரும் பார்த்தார்கள். கைதட்டினார்கள். அவ்வளவு தான். தம்பி விஜய் இன்னும் அரசியல்தலைவராக மாற வேண்டும் என்றார்.

மக்கள் நீதி மய்ய தலைவர்கமல்ஹாசனிடம் விஜய் பேச்சு குறித்து நிருபர்கள் கருத்துக்கேட்டனர். இதற்கு பதில் அளித்த அவர் 'இதில் நான் என்ன கருத்து சொல்ல வேண்டியிருக்கிறது. அவர் எனது பெயரை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறாரா? இல்லைதானே. பிறகு நான் ஏன் பதில் சொல்ல வேண்டும். முகவரியே இல்லாத கடிதத்துக்கு யாராவது பதில் கொடுப்பார்களா?.. அவர் என் தம்பி" என்று கூறினார்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 24 ஆயிரம் கன அடியாக குறைந்ததால் பரிசல் இயக்க மாவட்டநிர்வாகம் அனுமதிவழங்கி உள்ளது. இதனால் சுற்றுலாபயணிகள் பரிசலில் சென்று மகிழந்தனர்.

மல்லூர், அம்பேத்கர் நகரில் அமைக்கப்படவுள்ள ரயில்வே சுரங்கப்பாதை திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய கோரி சேலம் ரயில்வே கோட்ட மேலாளரிடம் அம்பேத்கர் மக்கள் இயக்கம் சார்பில் மனு அளிக்கப்பட்டது.

விஜய் கட்சியுடன் தே.மு.தி.க. கூட்டணியா?

பிரேமலதா பதில்!

பண்ருட்டி,ஆக.22

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், 'உள்ளம் தேடி இல்லம் நாடி' என்ற தலைப்பில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். அதன்படி அவர் நேற்று கடலூர் மாவட்டம், பண்ருட்டிக்கு வருகை தந்தார்.

அப்போது அவருக்கு அங்கு கூடியிருந்த கட்சி தொண்டர்கள் மேளதாளங்களுடன் வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து பிரேமலதா விஜயகாந்த் அங்கிருந்து ரோடு ஷோ மூலம் பொதுமக்கள், தொண்டர்களுடன் நடந்தவாறு பண்ருட்டி வரதராஜ பெருமாள் கோவில் அருகில் இருந்து பஸ் நிலையம் வரை வந்தார். அதன் பின்னர் அவர் அங்கு மக்கள் மத்தியில் பேசியதாவது:

நான் விஜயகாந்தை திருமணம் செய்த பின்பு பண்ருட்டிக்கு தான் முதலில் வந்தேன். இங்கு மக்கள் பிரமாண்ட வரவேற்பு அளித்தனர். பண்ருட்டி, கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் சட்டமன்ற தொகுதிகள் விஜயகாந்தின் கோட்டை. வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் பண்ருட்டியில் வென்று தே.மு.தி.க. சரித்திரம் படைக்கும். கர்நாடகாவில் இருந்து வரும் வெள்ள நீர் கடலூருக்கு வந்து தான் கடலில் வீணாக கலக்கிறது. மழைநீரை சேகரிக்க, மத்திய, மாநில அரசுகள் எதுவும் செய்யவில்லை. பண்ருட்டி பலா, முந்திரிக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. முந்திரி ஏற்றுமதி மண்டலம் உருவாக்க வேண்டும். என்.எல்.சி.க்கு நிலம் எடுப்பதை தே.மு.தி.க.வன்மையாக கண்டிக்கிறது. மக்கள் பாதிக்கப்படுவதால் நிலம் கையகப்படுத்துவதை என்.எல்.சி.நிறுத்த வேண்டும். வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் பண்ருட்டி தொகுதியில் மகத்தான வெற்றியை தர வேண்டும். தேர்தலின் போது மகத்தான கூட்டணி, மகத்தான வேட்பாளருடன் வருவேன். மக்கள் தே.மு.தி.க.விற்கு ஆதரவளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். அதன்பிறகு பிரேமலதா விஜயகாந்த் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில், மதுரை மாநாட்டில் த.வெ.க. தலைவர்விஜய், விஜயகாந்த்தை அண்ணன் என குறிப்பிட்டார். விஜய் எங்களுக்கு தம்பிதான்.

இது அரசியலுக்கு வந்ததற்கு பிறகு வந்ததல்ல. இந்த அண்ணன், தம்பி உறவு, விஜயகாந்த் திரைத்துறையில் வந்ததில் இருந்து தொடர்கிறது. தே.மு.தி.க. தற்போது எந்த கட்சியுடனும் கூட்டணியில் இல்லை என்றார்."

விஜய்க்கு தி.மு.க. ...

1–ம் பக்கத் தொடர்ச்சி

வில்லை என்றும், நீட் தேர்வை ரத்து செய்வது குறித்தும் விமர்சனம் செய்தார். அ.தி.மு.க. பற்றி பேசும் போது எம்.ஜி.ஆர். தொடங்கிய கட்சி தற்போது எப்படி உள்ளது? தற்போது அந்த கட்சியின் நிலை என்ன? இதை நான் சொல்லித் தெரிவதில்லை. அப்பாவித் தொண்டர்கள் இதை வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

2026 சட்டசபைத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது அக்கட்சித் தொண்டர்களுக்குத் தெரியும். எனவே எந்த வேடமிட்டு தமிழகத்துக்குள் பா.ஜ.க. வந்தாலும் அவர்களின் எண்ணம் ஈடேறாது என்றும் பகிரங்கமாக தாக்கிப் பேசினார். தனது கொள்கை எதிரி பா.ஜ.க. என்றும், அரசியல் எதிரி தி.மு.க. என்றும் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

அவர்தி.மு.க. பற்றி பேசியபோது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை 'அங்கிள்' என அழைத்தார். அவர் கூறும்போது, 'ஸ்டாலின் அங்கிள்', 'வாட் அங்கிள்', 'இட்ஸ் வெரி ராங்க் அங்கிள்'. தமிழ்நாட்டில் இப்படியொரு ஆட்சி நடக்கும் போது நாம் எப்படி பார்த்துக்கொண்டிருக்க முடியும். உங்களுக்கு மனசாட்சி இருந்தால் நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள் என்றார்.

மேலும் அவர் பேசிய போது, பெண்களுக்கு ரூ.1000 கொடுத்தால் போதுமா? படிக்கும் இடத்தில், வேலை பார்க்கும் இடத்தில், வெளியே செல்லும் இடத்தில் பாதுகாப்பு இல்லை என பெண்கள் கதறுகின்றனர். அந்தக் கதறல் உங்கள் காதில் கேட்கிறதா? இதில் உங்களை அப்பா என்று கூப்பிடச் சொல்கிறீர்கள். 'வெரி வெரி ராங்க் அங்கிள்' என்றார். மதுரை மாநாட்டு மேடையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, அங்கிள் என விஜய் அழைத்ததற்கு தி.மு.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் காட்டமாகவும் பதிலளித்துள்ளது.

இதற்கிடையே திருச்சியில் இன்று அமைச்சர் நேரு நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவரிடம், தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் மதுரை மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை அங்கிள் என விமர்சனம் செய்துள்ளாரே என கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், அவருடைய தராதரம் அவ்வளவுதான். ஒரு மாநில முதலமைச்சரை, பெரிய கட்சியின்தலைவரை, 40 ஆண்டு காலமாக அரசியலில் இருப்பவரைநேற்றுஅரசியலுக்கு வந்தவர்தரம் தாழ்ந்து விமர்சனம் செய்வதற்கு மக்கள் நல்ல பதில் சொல்வார்கள்.

நாங்களும் தேர்தலில் சரியான பதில் சொல்வோம். அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. 10 பேர் 50 பேர் கூடிட்டாங்க என்பதற்காக எது வேணாலும் பேசுவது சரியாக இருக்குமா? சரியாக இருக்காது என கோபமாக கூறினார்.

தெரு நாய்களை காப்பகங்களில்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

சமர்ப்பிக்க வேண்டும். இந்த காப்பகங்களில் கருத்தடை செய்யப்பட்ட மற்றும்தடுப்பூசி போடப்பட்ட தெருநாய்களுக்கும், அங்கே வைத்து பராமரிக்கப்படும் நாய்களுக்கும் போதுமான பணியாளர்கள் இருக்க வேண்டும்.

எந்த நாயும் வெளியில் விடப்படவோ அல்லது தப்பிக்கவோ இல்லை என்பதை உறுதிப்படுத்த சிசிடிவி மூலம் கண்காணிக்கப்பட வேண்டும். இது ஒரு தொடர்ச்சியான செயல் முறை என்பதால், நாய்கள் காப்பகங்களின் எண்ணிக்கையை காலப்போக்கில் அதிகரிக்க வேண்டும். டெல்லி என்.சி.டி., எம்சிடி, மற்றும் என்.டி.எம்.சி ஆகியவை அடுத்த 68 வாரங்களில் 5,000 நாய்களுக்கான காப்பகங்களைத் தொடங்க வேண்டும்.

நகரத்தின் பாதிக்கப்படக் கூடிய பகுதிகள் மற்றும் புறநகர்ப் பகுதிகள் உட்பட அனைத்து பகுதிகளிலிருந்தும் தெருநாய்களை விரைவில் பிடிக்கத் தொடங்க வேண்டும். இதை எவ்வாறு செய்வது என்பது அதிகாரிகளுக்குத் தெரியும், தேவைப்பட்டால் ஒரு சிறப்புப் படையை உருவாக்க வேண்டும். நகரத்திற்குள் மற்றும் புறநகர்ப் பகுதிகளை தெரு நாய்கள் அற்றதாக மாற்றுவது முதன்மையான பணியாக இருக்க வேண்டும். இந்தப் பணியில் எந்த சமரசமும் இருக்கக்கூடாது. நாய்களைப் பிடிப்பதற்கு எந்த தனிநபரோ அல்லது அமைப்போ தடையாக இருந்தால், அது குறித்து நீதிமன்றத்திற்குத் தகவல் அளிக்கப்பட்டால், அத்தகைய எதிர்ப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். பொதுநலனைக் கருத்தில் கொண்டே இந்த உத்தரவு பிறப்பிக்க ப்படுகிறது. பச்சிளங்குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகள் எந்த காரணத்திற்காகவும் வெறிநாய்களுக்கு பலியாகக்கூடாது. தெருநாய்களின் கடிக்கு அஞ்சாமல் சாலைகளில் சுதந்திரமாக நடமாடலாம் என்ற நம்பிக்கையை இந்த நடவடிக்கை ஏற்படுத்த வேண்டும். இந்த முழு செயல்முறையிலும் எந்த உணர்ச்சிகளும் சம்பந்தப்படக்கூடாது. இது செயல்முறையின் முதல் படியாக இருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுப்பூசிகள், அதன் கையிருப்பு மற்றும் தடுப்பூசி கோரியவர்களின் விவரங்களை வழங்க வேண்டும். இந்த உத்தரவுகளைச் செயல்படுத்துவதில் எந்த தனிநபரோ அல்லது அமைப்போ இடையூறு ஏற்படுத்தினால், அது நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என பழைய உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இந்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் ராமதாஸ்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

அவர் இன்னும் பதில் அளிக்கவில்லை. இதற்கிடையே சமீபத்தில் ராமதாஸ் கூட்டிய பொதுக்குழுவில் அவரது மகளான ஸ்ரீகாந்தி கலந்து கொண்டார். 22 பேர் கொண்ட நிர்வாககுழுவில்ஸ்ரீகாந்தியும் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. அவருக்கு மேடையில்ராமதாஸ் அருகிலேயே இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. இதனை தொடர்ந்து ஸ்ரீகாந்திக்கு கட்சியில்பொறுப்புவழங்கப்படலாம் என்று கூறப்பட்டது. இந்த நிலையில், ராமதாஸ் தரப்பு ஸ்ரீகாந்திக்கு பா.ம.க. நிர்வாக குழு உறுப்பினர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. 22 பேர் கொண்ட நிர்வாக குழுவில் ஸ்ரீகாந்தியும் இடம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னதாக ராமதாஸ் கூறியபோது, என் குடும்ப பெண்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்று சவுமியாவிடம் சொன்னேன். ஆனால் இப்போது நடப்பது உங்களுக்கு தெரியும். பொதுக்குழுவில் சொன்னதுபோல் குடும்ப பெண்கள் கட்சியில் வேண்டாம் என்று சொன்னேன். என்னிடம் கெஞ்சி, கூத்தாடி, வாதாடி தருமபுரியில் போட்டியிட்டார் சவுமியா. தருமபுரி தொகுதியில் முதலில் தான் நிற்பதாக கூறிய அன்புமணி, பின்னர்சவுமியாநிற்பதாக கூறினார். தனது குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அரசியலுக்கு வேண்டாம் என்று கூறியதற்கு எதிர்மாறாக அன்புமணி செயல்பட்டதாக கூறியிருந்தார் என்பதுகுறிப்பிடத்தக்கது.

முரசம்

22.08.2025

வேற்றுமையில் ஒற்றுமையே இந்தியாவின் தேசிய மொழி!

கல்வி தனி மனிதனின் வாழ்வையும் சமுதாயத்தின் வளர்ச்சியையும் எதிர்காலத்தையும் வடிவமைக்கும் சக்தி வாய்ந்த கருவி. மனிதர்களை அறியாமையிலிருந்து விடுவித்து, அறிவொளியை நோக்கி இட்டுச் செல்லும் சாதனம். கல்வியினால்தான்சமுதாயத்தில்நிலவும்அறியாமை, மூடநம்பிக்கைகள், பாகுபாடுகளை நீக்கி, நேர்மறையான மாற்றங்களைக் கொண்டுவர முடியும். சமத்துவ சமுதாயம் சாத்தியமாகும். கல்வியில் சிறந்தவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் புதிய கண்டுபிடிப்புகள், தொழில் மேம்பாடு போன்றவற்றால் பெரும் பங்களிப்பைச் செய்கிறார்கள்.

இத்தகைய கல்வியைக் குழந்தைப் பருவம் முதலாகத் தொடங்கிக் கற்கவேண்டும்.

அதற்கான வழிமுறைகளை அரசு ஏற்படுத்தித்தரவேண்டும். மாநில அரசுகளும் மத்திய அரசும் இதற்கான கொள்கைகளை வகுத்துக்கொண்டு செயல்படுகின்றன. மத்திய அரசின் திட்டங்களையும் அதற்கான நிதியைப் பெற்றுக் கொண்டு மாநில அரசுகள் செயல்படுத்துகின்றன. அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வியை உறுதிசெய்ய 2009–ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் மாறிவரும் உலகின் சூழ்நிலைக்கு ஏற்ப கல்வியை வழங்கவும் தேசிய கல்விக்கொள்கை 2020 கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போது செயல்வடிவம் பெற்றுவரும் தேசிய கல்விக் கொள்கையின் பரிந்துரைகளை அமல்படுத்துவதில் சமக்ர சிக்ஷாதிட்டம் முக்கியப் பங்காற்றுகிறது. இதற்கான செலவில் 60 சதவீதம் மத்திய அரசும், 40 சதவீதம் மாநில அரசும் ஏற்கின்றன. தமிழக அரசு ஏறத்தாழ அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. திட்டங்கள் தமிழில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. தேசிய கல்விக் கொள்கையை மட்டும் மறுத்து தமிழகத்திற்கென கல்விக் கொள்கையை வகுத்துக் கொண்டுள்ளது. எப்படியாயினும் மத்திய, மாநில அரசுகளின் நோக்கம் கற்றல் கற்பித்தல் சூழலை சிறப்பானதாக மாணவர்களுக்குத் தர வேண்டும் என்பதே.

பள்ளிக் கல்வியை நலிந்த பிரிவினருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் சாத்தியமாக்கும் பொருட்டு இலவசகட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் தனியார் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கவும் அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தை அரசே அந்தந்தத் தனியார் பள்ளிகளுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளது. இதன்படி தனியார் பள்ளிகள் 25 சதவீதம் வரை மாணவர் சேர்க்கையில் நலிந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த மாணவர்களுக்காக அரசு செலுத்த வேண்டிய தொகை பள்ளிகளுக்குக் கிடைக்கவில்லை என்ற நிலையில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் பங்கான 60 சதவீதம் நிதியை விடுவிக்காததால் மாநில அரசால் பள்ளி நிர்வாகங்களுக்குப் பணத்தைச் செலுத்த முடியவில்லை. தேசிய கல்விக் கொள்கையை மத்திய அரசு அமல்படுத்துவதை மத்திய அரசு சமக்ர சிக் ஷா திட்டத்துடன் இணைத்துள்ளது. மாநில அரசோ தேசிய கல்விக் கொள்கையை மறுத்து, நிதிக்காக உச்சநீதிமன்றத்தை அணுகியுள்ளது. இந்நிலையில், மாநில அரசுக்கு தனியார் பள்ளிகளுக்கான நிதியை வழங்கும் பொறுப்பு இருப்பதாக உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. அதே நேரத்தில், மத்திய அரசு இலவச கட்டாயக் கல்வித் திட்டத்தையும் தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவதையும் இணைக்காமல் தனித்தனியே அதற்கான நிதியை வழங்க வழிவகை செய்ய வலியுறுத்தியிருக்கிறது.

ஆளும் கட்சிகள் தங்கள் கட்சிகளின் கொள்கைகளை நிலைநிறுத்த முயலும்போது முரண்பாடுகள் தோன்றுகின்றன. கல்விக்கான மாதிரிப் பள்ளிகள் முதல் நூலகங்கள் வரைவாசிப்புப் பழக்கத்துக்குதமிழக அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. பெரும் நூலகங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இலக்கிய மன்றங்கள் பள்ளிகளில் நடத்தப்படட வேண்டும் என்பதில் மாநில அரசு ஆர்வம் கொண்டுள்ளது. அடுத்து, திணிப்பை ஏற்கமாட்டோம்; ஆனால், விருப்பப்பட்டவர்கள் விரும்பிய மொழியைக் கற்பதைத் தடுக்கமாட்டோம் என்ற அடிப்படையில் வாய்ப்புகளை வழங்க நவோதயா, பிஎம்ஸ்ரீ முதலான பள்ளிகளைத் தமிழகத்தில் அனுமதிக்கலாம்.

மூன்றாவது மொழியாக ஹிந்தியைக் கற்க விரும்புவோர் அந்தப் பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கட்டும்; மற்றவர்கள் இருமொழிக் கொள்கை வழங்கும் நமது மாநில அரசுப் பள்ளிகளில் பயிலட்டும். தமிழக மாணவர்கள் அனைவருக்கும் மத்திய–மாநில அரசுகளின் நிதியில் சிறந்த கல்வியுடன் ஒவ்வொருவரும் விரும்பும் கல்வியும் அவர்களுக்குச் சாத்தியமாகும். நாடாளுமன்ற உறுப்பினரான கனிமொழி ஒவ்வோர் இந்தியரும் பெருமிதம் கொள்ளும் வகையில் வேற்றுமையில் ஒற்றுமையே இந்தியாவின் தேசிய மொழி என்று அண்மையில் அயல்நாட்டில் பேசினார். அரசமைப்புச் சட்ட நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான இலவச கட்டாயக் கல்வித் திட்டத்தை பிற விருப்பத் தேர்வுடைய திட்டங்களுடன் இணைப்பதில் குழப்பங்கள் ஏற்படவே செய்யும். மத்திய அரசு இதை நீதிமன்றம் காட்டும் வழிமுறையில் அணுகித் தீர்வுகாண வேண்டும்.

ராசிபுரம் அருகே

பள்ளி வளாகத்தில் புகுந்த மரநாய்!

தீயணைப்பு வீரர்கள் மீட்டனர்!

ராசிபுரம்,ஆக.22

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலைய எல்லைக்குட்பட்ட வித்யாமந்திரி மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில் அபூர்வமான உயிரியான 'மரநாய்' ஒன்று சுற்றித்திரிந்தது. அப்போது அங்கு சுற்றித்திரிந்த தெருநாய்கள் அதனை துரத்திக் கொண்டிருந்தன. இதுகுறித்து, பள்ளி நிர்வாகம் உடனடியாக ராசிபுரம் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தது.

அறிவிப்பு கிடைத்த வுடன், தீயணைப்பு மற்றும் மீட்பு பணியாளர்கள் விரைந்து சம்பவ இடத்துக்குச் சென்று, தெருநாய்களை விரட்டினர். பின்னர் மரநாயை பாதுகாப்பாக மீட்டு, அதற்கு முதலுதவி செய்து உடனடியாக ராசிபுரம் வனத்துறையிடம் ஒப்படைத்தனர்.

வனத்துறை அதிகாரிகள், அந்த மரநாய் நலமாக இருப்பதாகவும், பரிசோதனைக்குப் பின் இயற்கை சூழலுக்குள் விடுவிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில்

644 பேருக்கு இன்று பணி நியமன ஆணை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!!

சென்னை, ஆக.22

சென்னையில் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியில் 644 பேர்களுக்கு பணி நியமன ஆணைகளை இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்தெரிவித்திருப்பதாவது:–

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் இன்று காலை 10.15 மணியளவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியில் மருத்துவப் மருத்துவப் பணியாளர் தேர்வுவாரியம்மூலமாக பொதுசுகாதாரம்மற்றும் நோய் தடுப்பு இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 182 உதவி மருத்துவ அலுவலர்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 48 பல் மருத்துவர்கள், மருத்துவக் கல்வி மற்றும்ஆராய்ச்சி இயக்ககத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 324 அறுவை அரங்கு உதவியாளர்கள், தமிழ்நாடு சுகாதார போக்குவரத்து துறைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு திறன்மிகு உதவியாளர் நிலை2 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி தேர்ந்தெடுக்கப்பட்ட 54 வட்டார சுகாதார புள்ளியியலாளர்கள் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட மொத்தம் 644 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அ.தி.மு.க.,பா.ஜ.க. அடிமை கூட்டணி என்று சொல்வதா?

நடிகர் விஜய் பேச்சுக்கு தக்க பதிலடி கொடுப்பேன்!

நயினார் நாகேந்திரன் பேட்டி!!

நெல்லை, ஆக.22–

நெல்லையில் இன்று மாலை மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா பங்கேற்கும் பாஜக பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் மாநாட்டு மேடை பணிகளை ஆய்வு செய்ததமிழகதலைவர் நயினார் நாகேந்திரன்நிருபர்களிடம் கூறியதாவது:

நெல்லையில் நடைபெறும் மாநாட்டில் தென் மாவட்டத்தில் உள்ள 5 பாராளுமன்ற தொகுதிகளை சேர்ந்த பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் பங்கேற்கின்றனர். இதையடுத்து காலையிலேயே கட்சி நிர்வாகிகள் சுற்றுலா தலத்திற்கு செல்வது போல இங்கே வந்து கொண்டு இருக்கிறார்கள். கட்சியை பலப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறோம். பாஜக இந்தியா முழுவதும் 1,652 எம்.எல்.ஏ.க்கள், 300க்கும் மேலான பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட உலகத்திலேயே மிகப்பெரிய கட்சி ஆகும். இதனால் உலகத்திலேயே மிகப் பெரிய தலைவர் பிரதமர் நரேந்திர மோடி. ஏற்கனவே வாஜ்பாய் சிறப்பான ஆட்சியை ஆட்சி செய்தார். அன்புத்தம்பி விஜய் இப்போது தான் கட்சி ஆரம்பித்திருக்கிறார்.

இதைத்தொடர்ந்து 2 மாநாடு நடத்தி முடித்த உடனேயே எங்களுடைய எதிரி பாஜக என்று சொன்னால் அதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள். அவர்களே முதலில் கொள்கை என்னவென்று சொல்லவில்லை. 5 தலைவர்களை காட்டி இதுதான் கொள்கை என்றால் எப்படி ஏற்றுக் கொள்வது.

இவ்வாறு அவர் கூறினார்.

அதைத்தொடர்ந்து பாஜக அதிமுக கூட்டணியானது அடிமை கூட்டணி என்று விஜய் விமர்சித்து உள்ளாரே என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது, அது நீங்கள் சொல்லித்தான் எனக்கு தெரியும். அதை நேரடியாக என்னிடம் யாராவது கூறினால் அதற்கு தக்க பதிலடி கொடுப்பேன்.

மாநாட்டில் விஜய் சிங்கம் கதை எல்லாம் கூறி இருக்கிறார். பல வருடமாக இந்த கதைகளை எல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். வருவர் கூறினார்.

பிரதமர், முதல்வர் பதவி பறிப்பு மசோதா:

மத்திய அரசின் நிலைப்பாட்டை ஆதரிக்க தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் மறுப்பு!

தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு தர்ம சங்கடம்!!

புதுடெல்லி, ஆக. 22

பிரதமர், முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பதவி பறிப்பு மசோதா தொடர்பாக மத்திய அரசு எடுத்துள்ள நிலைப்பாட்டை ஆதரிக்க தெலுங்கு தேசமும், ஐக்கிய ஜனதா தளமும் முன்வரவில்லை. இதனால் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு தர்ம சங்கடமான நிலை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மழைக் கால கூட்டத் தொடர் கடந்த மாதம் 21–ஆம் தேதி தொடங்கியது. இக் கூட்டத் தொடர் நேற்று நிறைவடைந்தது. இக் கூட்டத் தொடரில் குற்ற வழக்குகளில் கைது செய்யப்படும் பட்சத்தில் 30 நாட்கள் சிறையில் இருந்தாலே பிரதமர், முதல்வர்கள், அமைச்சர்கள் பதவி பறிப்புக்கு வழிவகை செய்யும் மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

ஆட்சியாளர்கள் நேர்மையானவர்களாகஇருக்க வேண்டும் என்பதை நிலைநாட்டும் வகையில் மத்திய அரசு முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது.

அமலாக்கத் துறை பல்வேறு மாநிலங்களில் அதிரடி சோதனைகளை நடத்தியது. முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் மீதான பிடியை இறுக்கியது. டெல்லி முதல்வராக இருந்த அரவிந்த் கேஜ்ரிவால், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், தமிழக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி ஆகியோர் தொடர்பான விவகாரங்கள் தேசிய அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

நிர்வாகத்தைசெம்மைப் படுத்த சில சீர்திருத்தங்கள் அவசியம் என்ற அடிப்படையில் மத்திய அரசு பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்து இந்த முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது.

5 ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறை தண்டனை கிடைக்கக்கூடிய கடுமையான குற்றச் செயல்களில் கைது செய்யப்பட்டாலோ அல்லது காவலில் வைக்கப்பட்டாலோ பிரதமர், முதலமைச்சர், மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் மற்றும் யூனியன் பிரதேச அமைச்சர்கள் உள்ளிட்டோரை பதவி நீக்கம் செய்வதற்கான மசோதாவை ஆகஸ்டு 20–ஆம் தேதி மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிமுகப்படுத்தியுள்ளது திருப்புமுனை நிகழ்வாகும்.

குறைந்தபட்சம் 5 ஆண்டு சிறை தண்டனை கிடைக்கக்கூடிய குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டு 30 நாள்கள் சிறையில் இருந்தாலே பிரதமர், முதல்வர்கள் மற்றும் அமைச்சர்களை நீக்கலாம் இல்லாவிட்டால் அதற்கு அடுத்த நாள் அவர்கள் தானாவே பதவி இழந்து விடுவார்கள். மத்திய அமைச்சர்களை பதவியில் இருந்து நீக்க பிரதமர் பரிந்துரைக்க வேண்டும். மாநில அமைச்சர்களை நீக்க முதல்வர் பரிந்துரைக்க வேண்டும். பிரதமர் அல்லது முதல்வர் பரிந்துரைக்காவிட்டாலும் 31–ஆவது நாளில் சம்பந்தப்பட்ட நபரின் பதவி தானாகவே காலாவதியாகிவிடும் என்பதை உறுதிப்படுத்தும் ஷரத்துக்கள், மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

இந்த மசோதா நேற்று மாநிலங்களவையில் கொண்டுவரப்பட்டது. கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்ப மக்களவை ஒப்புதல் அளித்ததைப் போல மாநிலங்களவையும் ஒப்புதல் அளித்துள்ளது.

கூட்டுக் குழுவில் மக்களவை உறுப்பினர்கள் 21 பேரும் மாநிலங்களவை உறுப்பினர்கள் 10 பேரும் அங்கம் வகிப்பார்கள். இந்த நாடாளுமன்ற கூட்டுக் குழு விரிவாக ஆய்வு நடத்தி நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடரின் போது அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று உறுதியாகத் தெரிகிறது.

இது ஒரு புறம் இருக்க தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்து வரும் தெலுங்கு தேசமும், ஐக்கிய ஜனதாதளமும் மத்திய அரசின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவிக்க முன்வரவில்லை. "இப்பிரச்சினை குறித்து நாங்கள் இதுவரை விவாதிக்கவில்லை. கட்சி ரீதியாக விவாதம் நடத்திய பிறகுதான் வெளிப்படையாக கருத்தை தெரிவிக்க முடியும்" என்று ஐக்கிய ஜனதாதள எம்.பி. சஞ்சய் குமார் தெரிவித்துள்ளார். "அரசு கொண்டுவந்துள்ள மசோதா குறித்து நாங்கள் கட்சி ரீதியாக எந்த நிலைப்பாட்டையும் இதுவரைஎடுக்கவில்லை. சில பிரச்சினைகள் இருக்கக் கூடும்.

இது தொடர்பாக கூட்டுக்குழு கூட்டத்தில் உரிய முறையில் கருத்து தெரிவிப்போம்" என்று தெலுங்கு தேசம் கட்சியின் மூத்த தலைவரும், மத்திய மந்திரியுமான ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.தெலுங்கு தேசமும், ஐக்கிய ஜனதா தளமும் மத்திய அரசின் நிலைப்பாட்டை வெளிப்படையாக ஆதரிக்க முன்வராததால் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தர்ம சங்கடமான நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது கூட்டணியில் அங்கம் வகிப்பவர்களை (சந்திரபாபு நாயுடு, நிதீஷ் குமார்) மிரட்டுவதற்காகவே மத்திய அரசு கருப்பு மசோதாவை கொண்டுவந்துள்ளது என்று காங்கிரஸ் எம்.பி. வேணுகோபால் சாடியது கவனத்தில் கொள்ளத்தக்கது.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப தேர்வில் (பட்டயப்படிப்பு) தேர்ச்சிபெற்றுகிருஷ்ணகிரிமாவட்டஊரகவளர்ச்சிமற்றும்ஊராட்சிஅலகல்பணிமேற்பார்வையாளர் பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் பணி நியமன ஆணை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ராமஜெயம் ஆகியோர் உள்ளனர்.

இந்தியா கூட்டணி

துணை ஜனாதிபதி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி சென்னை வருகை!

ஆக.24 இல் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து ஆதரவு திரட்டுகிறார்!!

புதுடெல்லி,ஆக.22

இந்தியா கூட்டணி துணைஜனாதிபதி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி ஆக.24 ஆம் தேதி சென்னை வருகை தந்து முதல்வர் ஸ்டாலினை சந்தித்து ஆதரவு திரட்டுகிறார்.

குடியரசுத்துணைத்தலைவர் பதவி வகித்து வந்த ஜகதீப் தன்கர் கடந்த மாதம் ஜூலை 21 ஆம் தேதி தன்னுடைய பதவியை ராஜினாமா செய்தார். இதனை தொடர்ந்து இந்த பதவி காலியாக இருந்து வந்தது.

காலியாக இருக்கும் துணை ஜனாதிபதி பதவிக்கு அடுத்த மாதம் (செப்டம்பர்) 9 ஆம் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டு உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 7 ஆம் தேதி தொடங்கி நேற்றோடு முடிவடைந்தது. இதனை முன்னிட்டு ஆளும் பா.ஜ.க. கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் தமிழ்நாட்டை சேர்ந்த மகாராஷ்டிர மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் துணை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இவர் நேற்று முன்தினம் பிரதமர் மோடி மற்றும் பல முக்கிய அமைச்சர்கள் முன்னிலையில் வேட்புமனுவை தாக்கல் செய்தார். இந்த தேர்தலில் ஆளும் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகமாக இருப்பதால் போட்டி இருக்காது என முதலில் கருதப்பட்டது. ஆனால் 'இந்தியா' கூட்டணியில் உள்ள எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி பேசி, போட்டி வேட்பாளரை நிறுத்த முடிவு செய்தனர். அதன் அடிப்படையில் வேட்பாளராக சுப்ரீம் கோர்ட்டு முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டி அறிவிக்கப்பட்டார். தேசிய ஜனநாயக கூட்டணியின்வேட்பாளர்சி.பி. ராதாகிருஷ்ணன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். 'இந்தியா' கூட்டணி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர். இவர்கள் 2 பேருமே தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

இதனால் தெற்கும், தெற்கும் மோதிக்கொள்வதாக டெல்லியில் தலைவர்கள் பேசுகிறார்கள். வேட்பு மனு தாக்கலின் கடைசி நாளான நேற்று சுதர்சன் ரெட்டி வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இந்நிலையில் இந்தியா கூட்டணி துணை ஜனாதிபதி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி (24 ஆம் தேதி) நாளை மறுநாள் சென்னை வர உள்ளார்.

அவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில்சந்தித்து துணை ஜனாதிபதி தேர்தலுக்கு ஆதரவு திரட்டுகிறார். மேலும் இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்களையும் சந்தித்து அவர் ஆதரவு திரட்ட உள்ளார்.

ஆத்தூர் அருகே தாண்டவராயபுரம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்நடைபெற்றது. முகாமில்ஆத்தூர்மேற்குஒன்றியசெயலாளர்வரதராஜன் மற்றும் கிழக்கு ஒன்றிய செயலாளர் டாக்டர் செழியன், கோட்டாட்சியர் தமிழ்மணி, வட்டாட்சியர் பாலாஜி, வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பூக்கடை ராஜா பைத்தூர் ரவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வீட்டில் வைத்திருந்த

பட்டாசு வெடித்து தீயில் கருகி வாலிபர் பலி!

சிவகாசியில் பரிதாபம்!!

சிவகாசி, ஆக.22–

சிவகாசியில் வீட்டில் வைத்திருந்த பட்டாசு வெடித்து தீயில் கருகி வாலிபர் பரிதாபமாக உயிரிழந்தார்.

சிவகாசி அம்மன் கோவில்பட்டி பகுதியை சேர்ந்தவர் கௌதம் (வயது27). இவர் கடந்த 19–ம் தேதி வீட்டிலிருந்த போது வீட்டின் மேல் மாடி அறையில் வைத்திருந்த பட்டாசுகள் வெடித்து சிதறியதாக கூறப்படுகிறது.

இதனால் ஏற்பட்ட தீ விபத்தில் கௌதம் 80 சதவீத தீக்காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் இன்று அதிகாலை விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் . அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே கௌதம், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்த புகாரின் பேரில் சிவகாசி நகர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

சேலம்,ஆக.22–

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 40,750 கன அடியிலிருந்து 56,997 கன அடியாக அதிகரித்துள்ளது.

நீர்மட்டம் 120.00 அடி.

நீர் இருப்பு 93.47 டி.எம்.சி.

அணையிலிருந்து காவிரி ஆற்றில் 40,,000 கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

கிழக்குமேற்கு கால்வாய் பாசனத்திற்கு 750 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

SEMAC CONSTRUCTION LIMITED

(Formerly Known as Semac Consultants Limited)
CIN: L42900TZ1977PLC000780
Registered Office: Pollachi Road, Malumichampatti P O., Coimbatore - 641 050
E-mail: compliance.officer@semacconstruction.com
Website: www.semacconstruction.com Phone: 0422 6655100

NOTICE

